செய்திவெளியீடு எண்.1/2019 நாள் 05.01.2019

## கீழ்ப்பாக்கம் நீரேற்று நிலையத்தில் குடிநீர் குழாய் பழுது சரிசெய்தல் பணி

04.01.2019 அன்று அதிகாலை சுமார் 1 மணியளவில் கீழ்ப்பாக்கம் நீரேற்று நிலையத்தில் அமைந்துள்ள 1200 மிமீ விட்டமுள்ள பிரதான குடிநீர் குழாயில் சேதம் ஏற்பட்டது, இந்தப் பிரதான குழாயின் மூலம் எழும்பூர், ஜார்ஜ் டவுன், புதுப்பேட்டை, சிந்தாதிரிப்பேட்டை, பட்டாளம், ஓட்டேரி, புளியந்தோப்பு, புரசைவாக்கம், கீழ்பாக்கம், அயனாவரம், சேத்துப்பட்டு மற்றும் நுங்கம்பாக்கம் ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

சரிசெய்யும் பணி உடனே துவக்கப்பட்டு, தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இப்பணி 06.01.2019 அன்று முடிவுற்று, 07.01.2019 முதல் சீரான குடிநீர் விநியோகம் செய்யப்படும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இதன் காரணமாக மேற்கண்ட பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் 06.01.2019 வரை தடைபடும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

ஆகவே கீழ்கண்ட பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் குடிநீர் தேவைக்காக அந்தந்த பகுதிப் பொறியாளர்களை கைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| பகுதிப்பொறியாளர் –5 | எழும்பூர், ஜார்ஜ்டவுன், புதுப்பேட்டை, சிந்தாதரிப்பேட்டை | 8144930905 |
| பகுதிப்பொறியாளர் –6 | பட்டாளம், ஓட்டேரி, புளியாந்தோப்பு, புரசைவாக்கம் | 8144930906 |
| பகுதிப்பொறியாளர் –8 | கீழ்ப்பாக்கம், அயனாவரம், சேத்துப்பட்டு | 8144930908 |
| பகுதிப்பொறியாளர் –9 | நுங்கம்பாக்கம் | 8144930909 |

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னை குடிநீர்